BSNLEU

தொலைத் தொடர்பு தோழன்

அக்டோபர்-நவம்பர் - 2014
இதழ் : 150-151

ஆசிரியர்
S. செல்லப்பா

7வது தமிழ் மாநில மாநாடு திருச்சி

BSNLEU

ஆசிரியர்

S. செல்லப்பா

94440 31715

ஆசிரியர் குழு

M. முருகையா

A. பாபு ராதாகிருஷ்ணன்

C. பழனிச்சாமி

சங்க அலுவலகம்

R.K. ஸ்ரீனிவாஸ்
அப்பார்ட்மெண்ட்ஸ்,
எண். 21, பாரதியார் முதல் தெரு,
பழவந்தாங்கல்,
சென்னை - 600 114.

தொலைபேசி

044-2267 3931

ஃபேக்ஸ்

044-2267 3931

மின்னஞ்சல்

chellappa1960@gmail.com
semmalarbsnleu@gmail.com

இணையதளம்

www.bsnleutnc.com

வடிவமைப்பு

S. பாலமுருகன்
93821 18906

அச்சகம்

S.K. பிரிண்டர்ஸ்
மறைமலை நகர்,

நவம்பர் 27 வேலை நிறுத்தம்

வெற்றிகரமாக்குவோம்..

BSNL நிறுவனத்தில் பணியாற்றும் Non-executive ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிர்வாகம் தீர்க்காமல் காலம் கடத்தி வருகிறது. 30 அம்ச கோரிக்கைகளை நிர்வாகத்திடம் கொடுத்து JAC சார்பாக போராட்ட திட்டம் அறிவிக்கப்பட்டது. BSNL நிர்வாகம் 27.06.2014 அன்று JAC தலைவர்களை அழைத்து 30 அம்ச கோரிக்கைகளை விவாதித்தது. மேலும் இந்த விவாத குறிப்புகளை எழுத்துப் பூர்வமாக நிர்வாகம் வெளியிட்டது. ஆனால் பிரச்சனைகளில் பெரிய முன்னேற்றம் ஏதும் இல்லை.

BSNL நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இந்த ஆண்டு PLI வழங்குவதற்கான கோரிக்கையை நிர்வாகம் ஏற்று கமிட்டி அமைக்கப்பட்டு விவாதிக்கப்படும் என வாக்குறுதி கொடுத்தது. ஆனால் அந்தக் கூட்டம் நடைபெறாமல் தள்ளிவைக்கப்பட்டது. நிர்வாகத்தின் அலட்சியப் போக்கிற்கு இது ஒரு உதாரணமாகும்.

கேடர்களின் பெயர் மாற்றம் என்பது எந்த செலவும் இல்லாத ஒரு கோரிக்கை. இதைக் கூட நிர்வாகம் அமலாக்க மனமில்லாமல் இழுத்தடிக்கிறது.

நிர்வாகத்தின் இந்த மெத்தனப் போக்கைக் கண்டித்து இரண்டு மணி நேர வேலை நிறுத்த வெளிநடப்பு போராட்டத்தை 30.09.2014 அன்று நாடு முழுவதும் JAC வெற்றிகரமாக நடத்திக் காட்டியது.

எனினும் செவிடன் காதில் ஊதிய சங்காக நிர்வாகம் சலனமற்று இருக்கிறது. ஊழியர்களின் கோபத்தை நிர்வாகம் புரிந்து கொள்ளவே இல்லை. BSNL ஐ லாபமாக மாற்ற வேண்டும் என்று உபதேசம் செய்யும் நிர்வாகம், ஊழியர்களின் பங்களிப்பை அதிகப்படுத்த கோரிக்கைகள் தீர்க்கவேண்டும் என்ற குறைந்த பட்ச ஞானம் கூட இல்லாமல் இருப்பது துரதிருஷ்டவசமானது.

நிர்வாகத்தை அசையவைத்து புரியவைக்க நவம்பர் 27 வேலை நிறுத்தம் அவசியமானது. வேலை நிறுத்தத்தை 100 சதம் நடத்தி நமது கோபத்தை நிர்வாகத்திற்குப் புரியவைப்போம். நமது கோரிக்கைகள் மிக மிக நியாயமானது என்பதை நமது வேலை நிறுத்தம் பறைசாற்றட்டும்.

நவம்பர் 27 BSNL ஊழியர்களின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்.

BSNLEU

உள்ளே...

மாநாட்டுப் புகைப்படங்கள்	1
நவம்பர் 27 வேலை நிறுத்தம்	3
7வது தமிழ் மாநில மாநாடு	4
சேவை கருத்தரங்கம்	5
வாழ்த்துரை	6
பொருளாய்வுக்குழு	7
புதிய மாநிலச் சங்க நிர்வாகிகள்	8
தகுதி ஆய்வு தகவல்கள்	9
தொழிலாளர் சட்டங்களை சீர்குலைக்காதே!	10
BSNL மற்றும் MTNL இணைப்பு	11
அமைதிக்கான நோபல் பரிசு	12
அகில இந்திய மாநாடு	13
பணி ஓய்வு	14
பணி ஓய்வு பாராட்டு விழா	16
பி.எஸ்.என்.எல் மூடலா ?	18
மாநாட்டுப் புகைப்படங்கள்	19

எழுச்சிகரமான ஏழாவது மாநில மாநாடு

BSNL ஊழியர் சங்கத்தின் ஏழாவது தமிழ் மாநில மாநாடு, பொன்மலை தியாகிகளின் பூமியாம் திருச்சி நகரில் 2014, அக்டோபர் 11 முதல் 13 வரை மிகவும் எழுச்சிகரமாக நடைபெற்றது. ஊழலுக்கு எதிராக போராடிய காரணத்தால், பொது மேலாளரால் படுகொலை செய்யப்பட்ட தோழன். சுகேந்திரபால் சிங்கின் நினைவாக வைக்கப்பட்ட நுழைவு வாயிலுக்குள், உழைப்பாளி வர்க்கத்தின் போராளி தோழர் R. உமாநாத் நினைவரங்கத்தில் தமிழ் மாநிலத் தலைவர் தோழர் K. மாரிமுத்து தலைமையில் இந்த மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் கொடியேற்றம் முதல், மூன்றாம் நாள் தீர்மானங்கள் நிறைவேற்றுவது வரை அனைத்து நிகழ்ச்சிகளும் திட்டமிட்ட படி மிகச் சிறப்பாக கட்டுக் கோப்பாக நடைபெற்றது. முதல் நாள் நடைபெற்ற பொது அரங்கில் 1200க்கும் மேற்பட்ட சார்பாளர்களும், பார்வையாளர்களும், சிறப்பு அழைப்பாளர்களும் என பெருந்திரளாக கலந்து கொண்டனர். இந்திய தேசியக் கொடியினை BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில உதவிச் செயலாளர் தோழர் M. நாராயணசாமி ஏற்றி வைக்க, சங்க கொடியினை தமிழ் மாநில உதவிச் செயலாளர் தோழர் C. பழனிச்சாமி விண்ணதிரும் கோஷங்களுக்கு இடையே ஏற்றி வைத்தனர். அரங்கின் முன் பகுதியில் வைக்கப்பட்டிருந்த தியாகிகளின் ஸ்தூபிக்கு அனைவரும் அஞ்சலி செலுத்தி அரங்கத்திற்குள் நுழைந்தவுடன், புதுக்கோட்டை தோழியர் பூம்பாவை அவர்கள் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தக்கூடிய வகையில் ஒரு அருமையான பாடலை பாடினார். நமது தமிழ் மாநில உதவிச் செயலாளர் தோழர். சுப்ரமணியன் அஞ்சலி உரை நிகழ்த்தினார். அனைவரும் அஞ்சலி செலுத்திய பின்னர் மாநாடு முறையாக துவங்கியது.

அனைத்து தோழர்களும் பங்கேற்ற போது நடைபெற்ற பொது அரங்கிற்கு BSNL ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் P. அபிமன்யு அவர்களின் துவக்க உரை, தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் தலைவர் தோழர் P. சம்பத் அவர்களின் சிறப்புரை ஆகியவை சிறப்பு சேர்த்தது. தமிழகத்தில் BSNL நிறுவனத்தை வளமாக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் நடைபெற்ற SAVE BSNL கருத்தரங்கில், நமது தொழிற்சங்க தலைவர்களும், நிர்வாகமும் ஆழமான கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். இது வந்திருந்த அனைவரையும் அண்டை மாநிலமான கேரளத்தை போல தமிழகத்திலும் லாபத்தை ஈட்டிட உறுதி ஏற்கச்செய்தது என்றால் மிகையாகாது.

மாலை 4.30 மணிக்கு துவங்கிய பொருளாய்வுக்குழுவில் சார்பாளர்கள் மட்டும் பங்கேற்றனர். மாநிலச் செயற்குழுவால் செலுமைப்படுத்தப்பட்ட செயல்பாட்டு அறிக்கையினை தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் S. செல்லப்பா அறிமுகப்படுத்தி உரை நிகழ்த்தினார். அவர் முன்வைத்த 105 பக்க அறிக்கையின் மீது அனைத்து மாவட்டங்களிலும் இருந்து 6 பெண் தோழர்கள் உட்பட 43 தோழர்கள் விவாதம் நடத்திய பின், மாநிலச் செயலரின் தொகுப்புரைக்குப் பின் செயல்பாட்டு அறிக்கையும், மாநில பொருளாளர் தோழர். K. சீனிவாசன் முன்வைத்த வரவு செலவு அறிக்கையும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இரண்டாம் நாள் மாலை நடைபெற்ற வாழ்த்துரை நிகழ்ச்சியில் CITU வின் தமிழக பொதுச் செயலாளர் தோழர் G. சுகுமாறன் உள்ளிட்டோரின் வாழ்த்துரைகள் என்பது, BSNL மட்டுமல்ல இதர அரங்கிலும் உள்ள தொழிலாளி வர்க்கத்துடன் நாம் இணைந்து போராட வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தது. மூன்றாம் நாள் மாநிலச் செயலரின் தொகுப்புரை மற்றும் பொது செயலாளரின் நிறைவுரைக்குப் பின் நடைபெற்ற புதிய நிர்வாகிகள் தேர்தல் என்பது ஏகமனதாக நடைபெற்றது. அதன் பின்னர் தகுதி ஆய்வுக்குழுவின் முடிவுகளையும், தீர்மானங்களையும் மாநாடு ஏற்றுக் கொண்ட பின்னர் மாநில துணைத்தலைவர் தோழர் V. வெங்கட்ராமன் நன்றிகூற மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

மூன்று நாட்களும் முப்பரிமாணத்தில் நிகழ்ந்த நமது பொதுச் செயலாளரின் உரைகள் என்பதும், இதர தலைவர்கள் கொடுத்த வழிகாட்டுதல்களும், மாநாட்டில் சார்பாளர்கள் விவாதித்து செழுமைப்படுத்திய ஆண்டறிக்கையும் மாநாட்டில் பங்கேற்றவர்களுக்கு, இந்த தமிழகத்தில் BSNL நிறுவனத்தையும், BSNL ஊழியர் சங்கத்தையும் முதலிடத்தில் கொண்டு வைக்கச் செய்யும் உறுதியையும், தன்னம்பிக்கையையும் கொடுத்தது என்றால் அது மிகையாகாது. இந்த மாநில மாநாடு வெற்றி பெற, தமிழகம் முழுவதும் இருந்து தோழர்கள் வழங்கிய நன்கொடையும், திருச்சி மாவட்ட தோழர்களின் அயராத பணிகளும், ஏற்பாடுகளும் பெரும்பங்கினை ஆற்றியது என்பதை மறக்க இயலாது. அந்த தோழர்கள் அனைவரையும் தமிழ் மாநிலச் சங்கம் மனதார பாராட்டுகிறது.

மாநாட்டின் பொது அரங்கம்

வரவேற்புக்குழு சார்பாக தோழர் அஸ்லம் பாஷா வரவேற்புரை ஆற்றினார். தமிழ் மாநிலச் சங்கம் சார்பாக தோழர் A. பாபு ராதாகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். வரவேற்புக்குழு தலைவர் தோழர் G. பாலச்சந்திரன் மற்றும் மாநிலத் தலைவர் தோழர் K. மாரிமுத்து ஆகியோர் தலைமையுரை ஆற்றினார்கள்.

அகில இந்திய பொதுச் செயலர் தோழர் P. அபிமன்யு துவக்கவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் ஜனநாயக முறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் நமது தமிழ் மாநிலச் சங்கத்தை வாழ்த்தினார். சமீபத்தில் வேலூர் மாவட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்ட 140 ஒப்பந்த தொழிலாளர்கள் பணிக்கு எடுக்கக் கோரி நடைபெற்ற வீரம் செறிந்த போராட்டத்தை மனதார பாராட்டினார். தேர்தல் பிரச்சாரத்தின் போது பழைய காங்கிரஸ் அரசின் கொள்கைகளால் பறிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு ஆதரவாக பேசி வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்த திரு நரேந்திர மோடி, ஆட்சிக்கு வந்த பின் அந்த ஏழை மக்களுக்கு " கசப்பு மருந்துகளையே'' கொடுத்து வருவதை தெளிவாக எடுத்துரைத்தார். புதிய அரசாங்கமும் கடை பிடித்து வரும் தாராள மய கொள்கைகளைக் கடுமையாக சாடிய பொதுச் செயலர் BSNL நலனுக்கு எதிராக ஆட்சியாளர்களும், மேல்மட்ட நிர்வாகமும் ஏற்படுத்தி வருவதையும் எடுத்துரைத்தார். தீர்க்கப்படாத 30 அம்ச கோரிக்கைகளின் மீது நிர்வாகத்தின் நிலைபாட்டை விளக்கிய அவர் அதற்கு எதிராக நமது JAC விடுத்துள்ள 27.11.2014 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலத் தலைவர் தோழர் P. சம்பத் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். அரசின் கொள்கைகள் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக இருக்கக் கூடிய இந்த கால கட்டத்தில் நமது வர்க்க ஒற்றுமையை வலியுறுத்தினார். வேற்றுமையில் ஒற்றுமை என்பது இந்தியாவின் தாரக மந்திரமாக உள்ள சூழலில் இன்றைக்கு பிரிவினை வாத சக்திகள் உழைக்கும் மக்களை சாதி, மத, இனம் மற்றும் மொழி அடிப்படையில் பிளவு படுத்த கடும முயற்சியினை மேற்கொண்டு வருகின்றனர். உழைக்கும் மக்கள் இதற்கு எதிராக ஒன்றுபட்டு போராட வேண்டும் என கேட்டுக் கொண்டார். தீண்டாமையின் கோர வடிவங்களில் ஒன்றாக சமீபத்தில் பீகார் முதல்வர் ஒரு கோவிலில் வழிபாடு நடத்தி விட்டு வந்த பின்னர், அந்த கோவிலை தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்த கொடுமை நிகழ்ந்ததை அவர் சுட்டிக் காட்டினார். தலித் மக்களின் எழுச்சியை ஒடுக்குவதற்கு நடைபெற்று வரும் ஒடுக்கு முறையை விவரித்த அவர், அதற்கு எதிராகவும் நாம் அனைவரும் ஒன்று பட்டு போராட வேண்டும் என கேட்டுக் கொண்ட அவர், தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கமும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட சங்கங்களும் தீண்டாமை ஒழிப்பு முன்னணியுடன் இணைந்து செயல்படுவதை பாராட்டினார். அவர் உரையாற்றிய பின் தமிழக தீண்டாமை ஒழிப்பு முன்னணிக்கு நன்கொடை வழங்க செயலர் அறை கூவல் விடுத்தவுடன் அரங்கில் இருந்த தோழர்கள் முதல் தவணையாக ரூ. 12000/- வழங்கினர்.

சேவை கருத்தரங்கம்

BSNL ஊழியர் சங்க 7 ஆவது மாநில மாநாட்டில் முதல் நாள் நண்பகல் நடைபெற்ற சேவை கருத்தரங்கத்தை துவக்கி வைத்த பேசிய மாநிலச் செயலர் தோழர் S. செல்லப்பா தமிழ்நாடு BSNL வருமானம் 2012 - 13 ஆண்டில் 1920 கோடி ரூபாய். இது 2013-14ல் 7.64% அதிகரித்துள்ளது என்பதை சுட்டிக் காட்டினார். செலவினங்கள் 2% அதிகரித்திருந்தாலும், முந்தைய ஆண்டு 494 கோடி ரூபாய் நஷ்டத்திலிருந்து 2013 - 14ம் ஆண்டு நஷ்டம் 430 கோடியாக குறைந்துள்ளது எனவும் ல் MNP-பிற தனியார் நிறுவனங்களிடமிருந்து BSNLக்கு சுமார் 98000 வாடிக்கையாளர்கள் இணைந்துள்ளதையும் குறிப்பிட்டு பாராட்டினார். தமிழகத்தில் மூன்று மாவட்டங்கள் லாபமடைந்துள்ளன. அவை நாகர்கோவில், பாண்டிச்சேரி மற்றும் குன்னூர் ஆகியன. இம் மூன்று மாவட்டங்களிலும் BSNLEU வலுவான சங்கமாக உள்ளது பாராட்டுக்குரியது.

- பிராட்பேண்ட் பழுதுகளை உடனடியாக நீக்குவது.
- நெல்லை மாவட்டத்தைப் போல் மாலை நேர மார்கெட்டிங் பணி அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்வது.
- BSNL நமது வாழ்வாதாரம் என்ற உணர்வோடு பணி செய்வது.
- சேவை மனப்பான்மையுடன் செயல்படுவது.

ஆகியவற்றை வலியுறுத்தி தமிழகத்தில் BSNL ஐ நிலை நிறுத்திட பாடு படுமாறு கேட்டுக் கொண்டார். தலைமைப் பொது மேலாளர் திரு. G.V.

ரெட்டி அவர்கள் கேரளம் மற்றும் ஒரிஸா போன்ற மாநிலங்களைப் போல தமிழகமும் லாபமீட்டும் மாநிலமாக மாற அனைவரின் ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக் கொண்டதுடன் நெல்லை கோவை ஆகிய மாவட்டங்கள் சிறப்பாக சேவை செய்யும் மாவட்டங்களாக தேர்ந்தெடுக்கப் பட்டள்ளதற்கு பாராட்டுதலையும் தெரிவித்தார். திருச்சி முதன்மை பொது மேலாளர் திரு V. ராஜி அவர்கள், முன்பு தான் பணியாற்றிய அந்தமானில் 5 ஆண்டுகளாக தொடர்ந்து வந்த நஷ்டம் கடந்த ஆண்டு லாபமாக மாற்றப்பட்டுள்ளதையும் தற்போது பின் தங்கியுள்ள திருச்சி மாவட்டத்தை ஊழியர்களுடன் இணைந்து முன்னணி மாவட்டமாக மாற்ற உறுதி ஏற்பதாகவும் தெரிவித்தார். நிறைவுரை ஆற்றிய பொதுச் செயலார் தோழர் P. அபிமன்யு அவர்கள் மொபைல் சேவையில் தனியார் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டு 7 ஆண்டுகளுக்கு பிறகு BSNL அனுமதிக்கப்பட்டாலும் இரண்டே ஆண்டுகளில் முன்னணி இடத்தை பிடித்ததும், அனைத்து தனியார் கம்பெனிகளும் 605 லட்சம் மொபைல் இணைப்புகள் வழங்கிய போது BSNL மட்டுமே 21/2 லட்சம் இணைப்புகள் வழங்கி முன்னேறியதையும், பின்னர் தனியார் முதலாளிகளின் நிர்ப்பந்தத்தால், குறிப்பாக திரு. ஆ. ராசா அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு 45 மில்லியன் இணைப்புகளுக்கான டெண்டரை ரத்து செய்த போது, ஒரு நாள் வேலை நிறுத்தத்தின் மூலம் 23 மில்லியன் இணைப்புக்களுக்காக டெண்டர் விடப்பட்டது. தொடர்ந்து அரசாங்கத்தின் கொள்கைகளே BSNL நஷ்டத்திற்கு காரணம். அதிகப்படியான ஊதியமே நஷ்டத்திற்கு காரணம் என்ற கூற்று சரியானது அல்ல. ஏனெனில் கடந்த ஊதிய உயர்விற்கு பின் 50000 ஊழியர்கள் ஓய்வு பெற்று விட்டனர். அந்த ஊழியர்கள் பணியில் இருந்து ஊதியம் வாங்கிக்கொண்டிருந்த போது, லாபமீட்டிய நிறுவனம் தற்போது நஷ்டம் அடைகிறது என்றால் ஊழியர்களின் எண்ணிக்கை தற்போதைய நஷ்டத்திற்கு காரணமாகாது.

ஒரு புறம் அரசின் கொள்கைகளை எதிர்த்து போராடுவது, மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வது, மறுபுறம் வாடிக்கையாளர்களிடம் இனிமையாக பேசுவது, சிறப்பான சேவையை அளிப்பது, பணிக் கலாச்சாரத்தை மேம்படுத்துவதன் மூலம் தான் BSNL ஐ பாதுகாக்க முடியும் என்பதை விரிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துரைத்தார். மாநில துணைச் செயலர் தோழர் M. முருகையா நன்றி கூற துவக்க விழா நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

வாழ்த்துரை

BSNL ஊழியர் சங்கத்தின் 7 ஆவது தமிழ் மாநில மாநாட்டினை வாழ்த்தி 12.10.2014 அன்று மாலை 4.30 மணியளவில் இரண்டாம் நாள் தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள். வந்திருந்த தலைவர்களை தமிழ் மாநில அமைப்புச் செயலாளர் தோழர் C. செல்வின் சத்யராஜ் வரவேற்றார். CITU சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் தோழர் G. சுகுமாறன் தனது வாழ்த்துரையில், சமீபத்தில் நடைபெற்ற ஒப்பந்த ஊழியர்களுக்கான உண்ணாவிரதம் மற்றும் வேலை நிறுத்தம் ஆகிய போராட்டங்களைப் பாராட்டி அரசின் கொள்கைகளுக்கு எதிராக நடைபெற உள்ள போராட்டங்களில் BNSL ஊழியர் சங்கம் முன்னின்று செயல்பட வேண்டும் என வாழ்த்தினார். NFTE BNSL சங்கத்தின் மாநில செயலாளர், அவர்களுடைய அகில இந்திய மாநாட்டில் கலந்து கொள்ள சென்று விட்டதால் அவர்களின் மாநில துணைத் தலைவர் தோழர் லோகநாதன் நமது மாநாட்டை வாழ்த்தி ஊழியர்களின் பிரச்சனையில் நாம் ஒன்றுபட்டு போராடுவோம் என வாழ்த்தினார். TE PU சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் A. செல்லபாண்டி, தோழர் M. கோபிநாதன் CS, SNEA(I), தோழர் S. சிவக்குமார் CS, AIBSNLEA, தோழர் P. அழகுபாண்டியராஜா CS SNATTA தோழர் C.K. நரசிம்மன் CS, AIBDPA, ஆகியோர் தமிழகத்தில் நமது கூட்டு போராட்டங்களை நினைவு கூர்ந்து அதில் BSNL ஊழியர் சங்கத்தின் செயல்பாட்டை பாராட்டி உரை நிகழ்த்தினார்கள். இவர்கள் அனைவரும் பேசியவுடன் உரை நிகழ்த்திய நமது பொது செயலாளர் தோழர் P. அபிமன்யு அவர்கள் மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் மேல் மட்ட நிர்வாகத்தின் செயல்திறன் இல்லாமை ஆகியவற்றை விவரித்து. அவர்களிடம் இருந்து BSNL ஐ காப்பாற்ற அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தால் மட்டுமே முடியும் என்று தெளிவு படுத்தி உரை நிகழ்த்தினார். 13.10.2014 அன்று BSNL WWCCன் தமிழ் மாநில அமைப்பாளர் தோழர் P. P. இந்திரா மற்றும் TNTCWU சங்கத்தின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் C. வினோத்குமார் ஆகியோர் நமது 7ஆவது தமிழ் மாநில மாநாட்டை வாழ்த்தினார்கள்.

பொருளாய்வுக்குழு

BSNL ஊழியர் சங்கத்தின் 7 ஆவது தமிழ் மாநில மாநாட்டில் 11.10.2014 மாலை 5.00 மணி முதல் 13.10.2014 காலை வரை நடைபெற்ற பொருளாய்வுக்குழு சார்பாளர்களை மட்டும் உள்ளடக்கி நடைபெற்றது. தீர்மானக்குழு தோழர் A. முருகையா, தோழர் M. நாராயணசாமி, தோழர் C. பழனிச்சாமி, தோழர் V. வெங்கட்ராமன், தோழர் A. பாபு ராதாகிருஷ்ணன், பதிவுக் குழு தோழர் L. பரமேஸ்வரன், தோழர் C. ராஜேந்திரன், தோழர் C. செல்வின்சத்யராஜ், மற்றும் தகுதி ஆய்வுக் குழு தோழர் S. சுப்ரமணியன், தோழர் S. தமிழ்மணி, தோழர் R. மகேந்திரன், தோழர் S. ரவீந்திரன் ஆகியவை தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னர், BSNL ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் S. செல்லப்பா, மாநிலச் செயற்குழு செழுமைப்படுத்திய அவரது 105 பக்க அறிக்கையினை அறிமுகப்படுத்தி சிறப்பான தொரு உரையினை நிகழ்த்தினார். சுமார் ஆறரை மணி நேரத்திற்கு மேல் ஆறு பெண் தோழியர்கள் உட்பட 43 தோழர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். BSNLஐ பாதுகாக்கவும், சேவைத் தரத்தை உயர்த்தவும், ஒப்பந்த ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டங்களுக்கு நாம் வழி காட்ட வேண்டும் என வலியுறுத்தியும், மதச் சார்பின்மையை வலியுறுத்தியும், தீண்டாமை கொடுமையை தடுத்து நிறுத்தும் போராட்டங்களில் பங்கேற்பது தொடர்பாகவும், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைக் கண்டித்தும், ஊழியர்களின் பிரதான கோரிக்கைகள் தொடர்பாகவும், நமது சங்க வளர்ச்சி மற்றும் போராட்டங்கள் ஆகியவற்றை முன்னிறுத்தியும் அவைகளை வலியுறுத்தியும் அனைத்து தோழர்களும் பேசினார்கள். கேடர் வாரியாக அற்புதமாக விவரித்து நிறைவுரை நிகழ்த்தினார். அனைத்துப் பகுதி ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை வடித்தெடுத்து 30 அம்சங்களாக முன்வைத்து நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்றவர்களை வாழ்த்தியதுடன், 27.11.2014 ஒரு நாள் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இறுதியில், நமது தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் S. செல்லப்பா தனது தொகுப்புரையில் சார்பாளர்கள் விவாதத்தில் எழுப்பிய அனைத்து சந்தேகங்களுக்கும் விடை அளித்த அவர், கீழ் கண்ட முடிவுகளையும் அறிவித்தார்.

- மத ஒற்றுமையை வலியுறுத்தி மாநிலம் தழுவிய கருத்தரங்கம் ஒன்றினை ஓரிரு மாதங்களில் மதுரையில் நடத்துவது.
- BSNL வளர்ச்சிக்கான மாவட்ட அளவிலான கருத்தரங்களை உடனடியாக நடத்துவது.
- தொழிற் சங்க வளர்ச்சிக்கு மண்டல வாரியான கருத்தரங்கங்களை உடனடியாக நடத்துவது.
- தமிழகத்தில் BSNL சேவைகளை மேம்படுத்திட மாவட்ட சங்கங்களோடு கலந்தாலோசித்து அதன் அடிப்படையில் முடிவினை எடுத்து டிசம்பர் முதல் வாரத்தில் நிர்வாகத்திற்கும், மத்திய சங்கத்திற்கும் கொடுப்பது.
- தொடர்ச்சியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் நெய்வேலி ஒப்பந்த தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், நோக்கியோ நிறுவனம் மூடப்படுவதை கண்டித்தும் தமிழ் மாநிலத்தில் 16.10.2014 அன்று அனைத்து கிளைகளிலும் ஆர்ப்பாட்டம் நடத்துவது.

மாநிலச் செயலர் தோழர் செல்லப்பாவின் தொகுப்புரைக்குப் பின் மாநில மாநாடு செயல்பாட்டு அறிக்கையினையும், மாநில பொருளாளர் தோழர் K. சீனிவாசன் முன் வைத்த வரவு செலவு அறிக்கையினையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

●

நெகிழ்ச்சியான தருணம்

தகுதி ஆய்வுக்குழு அறிக்கை ஏற்றுக் கொண்ட பின்னர் நமது 7ஆவது மாநில மாநாட்டில் சார்பாளராக கலந்து கொண்டவர்களில் வயதில் மூத்தவர், நமது தமிழ் மாநில உதவி செயலர் தோழர் M. நாராயணசாமி, வயதில் இளையவர் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த தோழியர் R. ராஜேஸ்வரி, மூத்த தோழரான தோழர் நாராயணசாமி, நமது இயக்கத்தின் செங்கொடியினை இளைய தோழரான தோழர் R. ராஜேஸ்வரியிடம் கொடுத்து இயக்கத்தை முன்னெடுத்து செல்லும் பணியினை இளைய தோழர்கள் மேற்கொள்ள வேண்டும் என விடுத்த வேண்டுகோளை, மன உறுதியுடன் தோழர் ராஜேஸ்வரி ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக நமது செங்கொடியினை அசைத்துக் காட்டியது அனைவரையும் நெகிழ்ச்சிக்கு உள்ளடக்கியது.

திருச்சியில் நடைபெற்ற ஊழியர் சங்கத்தின் 7ஆவது தமிழ் மாநில மாநாட்டில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய மாநிலச் சங்க நிர்வாகிகள்

தலைவர் :

தோழர் S. **செல்லப்பா,** SSS, சென்னை

துணைத்தலைவர்கள் :

1. தோழர் K. **மாரிமுத்து,** TM, கோவை
2. தோழர். V. **வெங்கட்ராமன்,** STS., கோவை
3. தோழர். T. **பிரேமா,** TM, சென்னை
4. தோழர். D. **ஜான்போர்ஜியா,** TM, திண்டுக்கல்
5. தோழர். C.**சுவாமிகுருநாதன்,** STS, அம்பாசமுத்திரம்.

செயலர் :

தோழர் A.**பாபுராதாகிருஷ்ணன்,** SSO, குன்னூர்

துணைச் செயலர்கள் :

1. தோழர் M. **முருகையா,** TTA ,சென்னை
2. தோழர் S. **சுப்ரமணியன்,** STS, திருப்பூர்
3. தோழர் P. **இந்திரா,** SSS , நாகர்கோவில்
4. தோழர் S. **தமிழ்மணி,** STS, திருச்செங்கோடு
5. தோழர் C. **செல்வின்சத்தியராஜ்,** TTA மதுரை

பொருளாளர் :

தோழர் K. **சீனிவாசன்,** TM, சென்னை

துணைப் பொருளாளர் :

தோழர் R. **மகேந்திரன்,** TTA, சென்னை

அமைப்புச் செயலர்கள் :

1. தோழர் A. **முகமதுஜாபர்,** TM , திருப்பூர்
2. தோழர் V. **மணியன்,** TM, ஈரோடு
3. தோழர் R. **மெய்யப்பன்கிரிஸ்டோபர் ,** STS(O), திருச்செந்தூர்
4. தோழர் M. **பாபு,** TM, கிருஷ்ணகிரி
5. தோழர் A. **அண்ணாமலை ,** SSS, கடலூர்
6. தோழர் M. **மல்லிகா,** STS, புதுக்கோட்டை
7. தோழர் P. **சந்திரசேகர்,** TM, போடி

பாராட்டுக்கள்

நமது 7 வது தமிழ் மாநாட்டில் ஒரு புதிய அம்சமாக மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் நேரடி ஒளிபரப்பு என்று சொல்லும் வகையில், உடனுக்குடன் நமது தமிழ் மாநில இணையதளத்தில் வெளியானது மாநாட்டில் பங்கேற்காத நமது தோழர்களைப் பரவசப்படுத்தியது. மற்றவர்களை அதிசயிக்க வைத்தது. அனைத்து நிகழ்ச்சிகளையும் புகைப்படம் எடுத்து அதனை பண்படுத்தி உடனடியாக இணையதளத்தில் இணைத்த பணிகள் அனைத்தையும் அனைவரும் வியக்கும் வண்ணம் செய்த விருது நகர் மாவட்டத்தில் பணியாற்றி வரும் தோழர் A . கண்ணன் (மதிக்கண்ணன்) மற்றும் தோழர் A.S. அஷ்ரப்தீன் ஆகிய இருவரையும் நமது மாநிலச் செயலாளர் தோழர் S. செல்லப்பா மாநில மாநாட்டில் அறிமுகப்படுத்திய போது அரங்கமே அதிரும் வண்ணம் கைதட்டல் எழுந்தது. கலை நயத்துடன் கூடிய தோழர்களின் இயக்கப் பணியினை நமது மாநில மாநாடே பாராட்டியது. அவர்களின் பணி மென்மேலும் சிறக்க தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்கள்.

வரவேற்புக்குழுவிற்கு பாராட்டுக்கள்

7 ஆவது தமிழ் மாநில மாநாட்டினை தமிழகத்தின் மையப்பகுதியான திருச்சியில் நடத்த வேண்டும் என தமிழ் மாநிலச் செயற்குழு கேட்ட போது, உடனடியாக ஏற்றுக் கொண்டு, பல சிரமங்களுக்கு இடையில் திருச்சி மாவட்டச் சங்கம் மிகச் சிறப்பாக நடத்தியது. சிறப்பானதொரு அரங்கம், தங்குமிடம், உணவு, மேடை, அலங்காரம் என அனைத்தையும் நேர்த்தியாக செய்த திருச்சி மாவட்ட சங்கத்தை சார்பாளர்களும், மாநிலச் செயலர் தோழர் S. செல்லப்பாவும், பொதுச் செயலாளர் தோழர் P. அபிமன்யு அவர்களும் பாராட்டியபோது அனைவரும் கரவொலி எழுப்பி தங்களின் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். தமிழ் மாநிலச் சங்கம் திருச்சி மாவட்டச் சங்கத்தை மனதார பாராட்டுகிறது.

மகளிரின் பங்கேற்பு

கடந்த தமிழ் மாநில மாநாடு நடைபெற்ற போது தமிழகத்தில் ஒரே ஒரு பெண் கிளைச் செயலாளர் தான் இருந்தார். இந்த மாநாட்டின் போது 4 பெண் தோழர்கள் கிளைச் செயலர்களாக உள்ளனர். கிட்டதட்ட அனைத்து மாவட்டங்களிலும், நமது சங்கத்தின் சார்பாக தலமட்ட கவுன்சில்களில் உறுப்பினராக ஒரு பெண் தோழர் உள்ளார். அது மட்டுமல்லாமல், இந்த மாநில மாநாட்டில் விவாதத்தில் பங்கேற்ற 6 பெண் தோழர்களின் உரையும் மிகச்சிறப்பாக இருந்தது என மாநிலச் செயலாளர் தனது தொகுப்புரையில் கூறியதை மாநில மாநாடு முழுமையாக அங்கீகரித்தது.

தகுதி ஆய்வு தகவல்கள் :

வயதுவாரியாக :

21 லிருந்து 30 வரை	3
31 லிருந்து 40 வரை	17
41 லிருந்து 50 வரை	71
51 லிருந்து 55 வரை	179
56 லிருந்து 60 வரை	91
மொத்தம்	361

பாலினம்	: ஆண்	342
	: பெண்	19
மொத்தம்	=	361

கல்விதகுதி :

எஸ்.எஸ்.எல்.சிக்குக் குறைவாக	=	35
எஸ்.எஸ்.எல்.சி	=	181
பி.யு.சி மற்றும் +2	=	62
பட்டப்படிப்பு	=	52
பட்டமேல் படிப்பு	=	16
பட்டயப் படிப்பு	=	4
பொறியியல் பட்ட படிப்பு	=	9
குறிப்பிடாதோர்	=	2
மொத்தம்		361

கேடர்வாரியாக :

RM and GROUP D	=	7
DRIVER	=	2
JAMEDHAR	=	1
TM and T MAN	=	212
Sr. TOA, SSS, STS	=	97
TTA	=	39
Sr. ACCT	=	2
JAO	=	1
TOTAL		361

சங்கப் பொறுப்பு :

கிளை நிர்வாகிகள்	=	201
மாவட்ட நிர்வாகிகள்	=	115
மாநில நிர்வாகிகள்	=	18
உறுப்பினர்கள்	=	27
மொத்தம்		361

மாநாட்டில் பங்கேற்பு :

இதுவரையில் பங்கேற்காதோர்	=	28
1 மாநாடு மட்டும்	=	25
2 மாநாடுகள்	=	33
3 மாநாடுகள்	=	46
4 மாநாடுகள்	=	30
5 மாநாடுகள்	=	46
6 மாநாடுகள்	=	153
மொத்தம்		361

நன்கொடைக்கு

நன்றி!

தோழர். ராதாகிருஷ்ணன், TM சோமனூர், கோவை தனது சம்பள முரண்பாடு பிரச்னையில் தீர்வு கண்டதற்காக, மாவட்ட, மாநிலச் சங்கங்களுக்கு தலா ரூ.500 நன்கொடை அளித்துள்ளார்.

தோழர். சங்கரநாராயணன், SS(O) SBC கோவை, புதல்வி செல்வி. S. காவ்யா, All India Secondary School Examination ல் Distinction பெற்றுள்ளார். தோழர் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் விதமாக மாநிலச் சங்கத்திற்கு ரூ.500 நன்கொடை அளித்துள்ளார். செல்வி. காவ்யாவுக்கு பாராட்டுக்களையும், தோழருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

தொழிலாளர் சட்டங்களை சீர்குலைக்காதே!

மோடி அரசுக்கு அனைத்து மத்திய தொழிற் சங்கங்கள் எச்சரிக்கை :

தலைநகர் புது தில்லியில் அனைத்து மத்தியத் தொழிற்சங்கங்களின் கூட்டுமேடையின் (Joint Platform of Central Unions) சார்பில் சிறப்பு மாநாடு 15.09.2014 அன்று நடைபெற்றது. சிறப்பு மாநாட்டில் சிஐடியு அகில இந்திய தலைவர் ஏ. கே. பத்மநாபன், பொதுச் செயலாளர் தபன் சென் MP, AITUC, INTUC, HMS, BMS, LPF, AICCTU, TUCC, SEWA, UTUC சங்கத் தலைவர்களும், நமது பொதுச் செயலர் P. அபிமன்யு, அகில இந்திய தலைவர் தோழர் V.A.N.நம்பூதிரி , NFTEதலைவர்கள் உட்பட பல்வேறு சங்கத்தலைவர்களும் கலந்து கொண்டனர். மேலும் வங்கி, காப்பீடு, பாதுகாப்பு, ரயில்வே, மத்திய மாநில அரசு ஊழியர் சங்கத்தலைவர்களும் பங்கு பெற்றனர்.

சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தில் முக்கிய பகுதிகள் :

மத்திய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் தன்னிச்சையாக தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்திட முயற்சி மேற்கொண்டிருப்பதற்கு தொழிற்சங்க கூட்டு மேடை ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது. சட்டத் திருத்தங்களில் பல தொழிற்சங்க உரிமைகள் உட்பட தொழிலாளர்களின் பணி நிலைமைகளில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். தொழிலாளர் நலச் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்படுவதற்கு முன் தொழிற்சங்கங்களை அழைத்து ஆலோசனை மேற்கொள்ளப்படும் என்று தொழிலாளர் நல அமைச்சர் அளித்திட்ட உறுதிமொழியையும் மீறி இவ்வாறு முயற்சி எடுக்கப்பட்டு வருவது துரதிர்ஷ்டவசமானது, 2014 ஜூலை 31 அன்று ராஜஸ்தான் சட்டமன்றத்தில் தொழிலாளர் நலச் சட்டங்கள் பலவற்றில் நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தங்கள், தொழிலாளர்களை 'வேண்டும்போது வேலைக்கு எடுத்துக்கொண்டு வேலை முடிந்ததும் வெளியேற்றுவது' என்ற மோசமான கொள்கையை நிறைவேற்றுவதை வேலையளிப்பவர்களுக்கு மிகவும் எளிதாக்கி இருக்கிறது.

அதேபோல் ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்திருக்கும் ஒருவர் தனக்குக் கீழ் 20 தொழிலாளர்களை வைத்திருந்தால் பதிவு செய்ய வேண்டும் என்கிற சட்டப்பிரிவை 50 - என மாற்றி இருப்பதன் மூலம் அநேகமாக அனைத்து ஒப்பந்ததாரர்களும் இச்சட்ட வரையறையின்கீழ் வராமல் தப்பித்துக் கொள்வார்கள். மேலும் முன்மாதிரி வேலையளிப்பவராக இருக்க வேண்டிய மத்திய அரசும், மாநில அரசுகளும் கூட மிகவும் மோசமான விதத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை நியமித்து, அவர்களுக்கு பணிப்பாதுகாப்போ, சமூகப் பாதுகாப்போ இல்லாமல் செய்துள்ளன.

இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. நாடாளுமன்றத்தில் தொழிற்சாலை சட்டம் மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களுக்கு திருத்தங்கள் செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சட்ட முன்வடிவுகளும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளைக் கடுமையாகப் பாதிக்கக் கூடியவைகளேயாகும். இவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகள், ராஜஸ்தான் மாநிலத்தில் செய்துள்ள சட்டத்திருத்தங்களை நியாயப்படுத்தக்கூடிய விதத்திலேயே அமைந்துள்ளன. மேலும் கொண்டு வரப்படும் திருத்தங்கள், தொழிலாளர் அமைப்புகளைக் கலந்து பேசி முடிவுகள் எடுக்கும் முறையை ஒழித்துக் கட்டக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன. ஒட்டு மொத்தத்தில் மத்திய அரசும், ராஜஸ்தான் மாநில அரசும் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள அனைத்துத் திருத்தங்களும் வேலையளிப்பவர்கள் தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்வதற்கும், ஆலைகளை தங்கள் இஷ்டம்போல் இழுத்து மூடுவதற்கும், மிகப் பெரிய அளவில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிப்பதற்கும் வகை செய்கின்றன.

நாட்டிலுள்ள தொழிலாளர்களில் 70 சதவீதத்தினரை தொழிலாளர் நலச் சட்டங்களின் வரையறையிலிருந்து நீக்கக்கூடிய விதத்தில் இத்திருத்தங்கள் அமைந்துள்ளன. அதன்மூலம் வேலையளிப்பவர்கள் தங்கள் இஷ்டம்போல் தொழிலாளர்களைக் கசக்கிப்பிழியவும், சுரண்டவும் வகை செய்கின்றன.

மேலும் மத்திய அரசு, சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ஐஎல்ஓ) தீர்மானத்தின் அடிப்படையில் 43வது, 44வது மற்றும் 45வது இந்தியத் தொழிலாளர் மாநாடுகள் பரிந்துரைத்தபடி, மாதத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் அளித்திடவும், ஒப்பந்த ஊழியர்களுக்கும் நிரந்தர ஊழியர்களுக்கு இணையான ஊதியம் அளித்திடவும் மறுக்கிறது. மேலும் விலைவாசியைக் கட்டுப்படுத்திடவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடவும், மத்தியத் தொழிற் சங்கங்கள் முன்வைத்து பத்து அம்சக் கோரிக்கைகளையும் பரிசீலிக்க மறுக்கிறது. மேலும் மத்திய அரசு இன்சூரன்ஸ், ரயில்வே, ராணுவம் மற்றும் பல்வேறு துறைகளிலும் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்திடவும், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்குத் தாரை வார்த்திடவும் மிகவும் பிற்போக்குத்தனமான முறையில் நடவடிக்கைகள் எடுத்து வருவதையும் தேசிய மாநாடு கண்டிக்கிறது.

மத்திய - மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத, ஊழியர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக அணி திரளுமாறு அனைத்துத் தொழிலாளர்களையும், ஊழியர்களையும் தேசிய மாநாடு அறைகூவி அழைக்கிறது. மத்திய- மாநில அரசுகளின் ஊழியர் விரோத தொழிலாளர்விரோத நடவடிக்கைகளை ஊழியர்கள் / தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய விதத்தில்

1). மாநில அளவில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் சிறப்பு மாநாடுகள் நடத்திடவும், மாவட்ட மற்றும் தொழிற்சாலை மட்டங்களில் சிறப்பு மாநாடுகள் நடத்திடவும்

2). 2012 டிசம்பர் 5 அன்று மாநிலத் தலைநகர்களிலும், புதுதில்லியிலும் தேசிய எதிர்ப்பு நாள் அனுசரித்திடவும் தீர்மானிக்கிறது. இவ்வியக்கங்களை மகத்தான முறையில் வெற்றி பெறச் செய்யுமாறு அனைத்துத் தொழிலாளர்களையும், ஊழியர்களையும் தேசிய மாநாடு கேட்டுக்கொள்கிறது. ஒன்றுபட்ட தொழிலாளர் இயக்கங்களில் நாம் முழுமையாக நம்மை இணைத்துக்கொள்வோம்.

BSNL மற்றும் MTNL இணைப்பு

BSNLஐயும், MTNLஐ யும்இணைக்க வேண்டும் என்ற பேச்சு சில ஆண்டுகளாக அடிபட்டு வருகிறது. இரண்டுமே பொதுத்துறைகள்தோனே! இணைந்தால் பிரம்மாண்டமாக இருக்குமே! என்ற எண்ணம் சில ஊழியர்களின் மனதில் உள்ளது. ஆனால் அதன் பின் உள்ள ஆழமான சதியைப் புரிந்து கொள்ளவேண்டியுள்ளது. சில மாதங்களுக்கு முன்னால் BSNL, MTNL மற்றும் ITI யும் இணைப்பதாக தகவல்கள் வெளிவந்தன. பின்னர் ஏனோ ITI இதிலிருந்து விடுபட்டது. இணைப்பினால் ஏற்படும் ஊழியர் பிரச்சனைகளைப் பற்றி நிர்வாகம் 04.02.2014ல் சங்கங்களிடம் கருத்துகேட்டது. மோடி அரசு பதவியேற்றபின் இந்தபிரச்சனை விசுவரூபம் எடுத்துள்ளது. பத்திரிக்கைகளில் வந்த செய்திகளின்படி

1. புதிய டவர்கம்பெனி 31.12.2014 க்குள் ஆரம்பிக்க வேண்டும்.

2. BSNL, MTNLல் உள்ள காலி நிலங்கள், சொத்துக்களை 31.12.2014 க்குள் பணமாக்க வேண்டும்.

3. இணைப்பு சம்பந்தமாக 31.03.2015க்குள் சங்கங்களுடன் பேசி முடிக்க வேண்டும்.

4. 31.03.2015 க்குள் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் விவாதித்து குறிப்பு தயார் செய்வது,

5. 30.03.2014க்குள் அமைச்சரவை ஒப்புதல் பெறுவது.

6. 31.07.2015க்குள் இணைப்பு நடத்தி முடிக்கப்படவேண்டும் என கால அட்டவனை முடிவு செய்யப்பட்டுள்ளது.

இணைப்பை ஏன் நாம் எதிர்க்கிறோம் ?

இணைப்பை நியாயப்படுத்தும் அரசு, அதற்கு சொல்லும் காரணம் - இணைப்பினால் நாடு முழுவதும் ஒரே சீரான சேவையைத் தர இயலும் என்கிறது.

நாம் எதிர்ப்பதற்கான காரணங்கள் :

MTNL கடந்த நான்காண்டில் 16,584 கோடி நட்டத்தை சந்தித்துள்ளது. BSNL ன் நஷ்டம் இதுவரை 32,026 கோடிகள்.

20.12.2013 ல் MTNL செலவு மட்டும் ரூ. 4,901 கோடிகள் (அதாவது 143 %) அதாவது சம்பளம் கொடுக்கவே இயலாத நிலை, BSNL சம்பளச் செலவு வருமானத்தில் 51 % MTNL ன் பங்குகள் 43.75 % விற்கப்பட்டு விட்டது. BSNL ல் 100 சதபங்கு அரசின் கையில், இரண்டையும் இணைத்தால், இணைந்த நிறுவனம் பங்கு விற்பனைக்கு உட்பட்ட நிறுவனமாக மாறி விடும். MTNLன் Liability Rs. 29,188 அதிகமாக உள்ளது. மொத்தத்தில் MTNL நிறுவனம் BSNL ஐ விட எல்லாவிதத்திலும் மோசமான நிலையில் உள்ளது. MTNL நலிவடைந்த நிறுவனமாக மாறிவிட்டது. இதை மாற்றாமல், அரசு MTNL ஐ மீட்காமல் இணைந்தால் BSNLம் நலிவடையும், BSNL மற்றும் MTNL ஊழியர்களின்ஊதிய விகிதங்களில் மாறுபாடு உள்ளது. இணைத்தால் ஒரே நிறுவன ஊழியர்கள் இரு வேறு ஊதியங்கள் பெறும் சூழல் ஏற்படும். அதேபோல் பென்சன் நிதி ஒதுக்கீடு செய்வதில் சிக்கல்கள் உருவாகும். MRS திட்டத்திலும் சிக்கல்கள் ஏற்படும்.

MTNL ன் சொத்து மதிப்பு கடனைவிட குறைவு. இத்துடன் BSNLஐ இணைத்தால் புதிய நிறுவனத்தின் மொத்த சொத்து, கடனைவிட குறைவாகிவிடும் (அதாவது 50 % கீழ்). எனவே புதிய நிறுவனம் நலிவடைந்த நிறுவனமாகி விடும். எனவே MTNL ன் கடன்களை சரி செய்யாமல், விற்கப்பட்ட பங்குகளை அரசே திரும்ப பெறாமல், ஊழியர்களின் ஊதிய விகிதங்களை ஒன்றுபடுத்தாமல் இணைப்பது என்பது எதிர்பார்க்கும் பலனை தராது. பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். அடிமாட்டு விலைக்கு அன்னிய கம்பனிகளுக்கு விற்கும் நிலை ஏற்படும். எனவே இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காணாமல் BSNL, MTNL இணைப்பு கூடாது.

Forum of BSNL Unions / Association of Executives and Non executives முடிவு ஊழியர்களின் நியாயமான கவலைகளை தீர்த்து வைக்காமல், இணைப்பைத் தடுத்து நிறுத்த போராட்டங்கள் நடத்த 12.09.2014 அன்று நடைபெற்ற கூட்டத்தில் FORUM முடிவு செய்யப்பட்டது. BSNL - MTNL இணைப்பு தொடர்பாக அரசாங்கம் வேகமாக செயல்படுகிறது. ஜூன் 2015 இணைப்பிற்கான இலக்கு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடுமையான மற்றும் பங்கு விற்பனை மற்றும் ஊழியர் பிரச்சனைகள் ஆகிய ஊழியர்களின் முக்கிய கவலைகள் தொடர்பாக அரசாங்கம் பேசவில்லை. இந்த பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இணைப்பு நடைபெறக்கூடாது என முடிவு FORUM செய்தது.

இணைப்பு தொடர்பான பிரச்சனையில் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட ஏற்கனவே முடிவு செய்துள்ளது. 12.09.2014 அன்று நிர்வாகத்துடன் நடைபெற உள்ள கூட்டத்தில் இணைப்பு தொடர்பான பிரச்சனைகளோடு, டெலாய்ட்டி குழு பரிந்துரைகள் மற்றும் BSNLன் புத்தாக்கம் தொடர்பான பிரச்சனைகளும் போராட்ட கோரிக்கைகளில் இணைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. விரைவில் நடைபெற உள்ள அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

12.09.2014 அன்று நடைபெற்ற ஊழியர்களின் INTERSE SENIORITY தொடர்பாக உருவாக்கப்பட்ட துணைக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் BSNL- MTNL இணைப்பு தொடர்பாக ஊழியர் தரப்பு தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது. FORUM கூட்டத்தின் முடிவின் அடிப்படையில், MTNL ன் கடன் மற்றும் பங்கு விற்பனை ஆகிய முக்கிய பிரச்சனைகள் முதலில் விவாதித்து தீர்க்கப்பட்டால் தான் INTERSE SENIORITY தொடர்பாக விவாதிக்க முடியும் என ஊழியர் தரப்பு உறுப்பினர்கள் நிர்வாகத்திடம் தெரிவித்தனர். BSNL மற்றும் MTNL அதிகாரிகள் முன் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் P.அபிமன்யு இந்த முடிவை விரிவாக விவரித்தார். இதர சங்கங்களின் பிரதிநிதிகளும் இதே நிலையை எடுத்து அரசாங்கம் முதலில் இணைப்பு தொடரான முக்கிய பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டும் என்றனர். எனவே INTERSE SENIORITY தொடர்பாக எந்த ஒரு விவாதமும் நடைபெறவில்லை.

●

எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனுக்கு அஞ்சலி

தமிழகத்தின் முன்னோடி பெண் எழுத்தாளரும், முற்போக்கு சிந்தனையாளருமான திருமதி ராஜம் கிருஷ்ணன், தனது 89 ஆம் வயதில் 20.10.2014 அன்று காலமானார். தனது 16ஆவது வயதிலேயே எழுத தொடங்கிய அவரது படைப்புகள் பல்கலை கழகங்களில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராகவும், உழைப்பு சுரண்டலுக்கு எதிராகவும் அவரது ஆவேசத்தை அவரது படைப்புகளில் நாம் காணலாம். மலை வாழ் மக்கள், விவசாயத் தொழிலாளர், உப்பளத் தொழிலாளர் ஆகியோரின் வாழ்க்கைகளை இலக்கியமாக சித்தரித்த அவர், சாகித்ய அகாடமி விருது, சோவியத் லாண்ட் நேரு விருது, திரு.வி.க விருது உள்ளிட்ட பல விருதுகளை பெற்றவர். அவரது மறைவு முற்போக்கு இலக்கிய உலகிற்கு மிகப்பெரிய இழப்பாகும். அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்குகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு

இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு இந்தியாவை சேர்ந்த திரு.கைலாஷ் சத்யார்த்திக்கும், பாகிஸ்தானை சேர்ந்த மலாலா யூசுப்சாய்க்கும் ''குழந்தைகளுக்கு எதிரான ஒடுக்கு முறைக்கு எதிராகவும், குழந்தைகளுக்கான கல்வி உரிமைக்காகவும் அவர்கள் நடத்திய போராட்டங்களுக்காக'' கிடைத்துள்ளது.

60 வயதாகும் திரு.கைலாஷ் சத்யார்த்தி தனது 37 ஆண்டு கால இந்த போராட்டத்தில் அவரது அமைப்பான குழந்தைகள் மீட்பு அமைப்பின் (BBA) மூலமாக 78,500 குழந்தை தொழிலாளர்களை மீட்டெடுத்துள்ளார். குழந்தைகளுக்கு கல்வி அளிக்காமல் அவர்களை வேலைக்கு அனுப்புவது மிகப்பெரிய குற்றம் என்று கூறும் அவர் இதன் காரணமாகவே, வேலையில்லா திண்டாட்டம், வறுமை, கல்வி அறிவு இன்மை ஆகியவை அதிகரித்துள்ளதாகவும் கூறுகிறார். ''அனைவருக்கும் கல்வி'' இயக்கம் தொடங்கப்படுவதில் இவரது பங்களிப்பு சிறப்பானது. பல்வேறு விருதுகளை பெற்றுள்ள இவர், தனது அமைப்பினால் விடுவிக்கப்பட்ட சிறுவர்கள் நடுவே டெல்லியில் வாழ்ந்து வருகிறார்.



மற்றொரு நோபல் பரிசு வெற்றியாளரான மலாலா யூசுப்சாய், இந்த விருதை பெரும் இள வயது பெண் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கில் மதத்தின் பெயரால் பெண்களின் கல்வி அறிவுக்கு எதிரான தாலிபான் தீவிரவாதிகளின் தடைக்கு எதிராக போராடிய மலாலா, அவர்களின் துப்பாக்கி குண்டுகளால் தாக்கப்பட்டு மரணத்தின் விளிம்பு வரை சென்றவர். உயிர் பிழைத்த பின்னரும் உயிருக்கு பயந்து வாழாமல் பெண் கல்விக்காகவும் குழந்தைகளின் கல்விக்காகவும் தொடர்ந்து போராடி வரும் 17 வயதான மலாலாவிற்கும் நோபல் பரிசு கிடைத்தது பெருமைக்குரியது.

முதலாளித்துவத்தின் கோர வடிவங்களில் ஒன்றான குழந்தை தொழிலாளர் முறையினை ஒழிப்பதற்காகவும், குழந்தைகளின் கல்வி உரிமைக்காகவும் போராடி வரும் இந்த இருவரின் பணி சிறக்கவும், அவர்கள் நோபல் பரிசு பெற்றமைக்காகவும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் உரித்தாக்குகிறது.

கொல்கொத்தாவில் அகில இந்திய மாநாடு

BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது அகில இந்திய மாநாடு கொல்கொத்தா நகரில் நவம்பர் 6ஆம் தேதி முதல் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அதற்கான ஏற்பாடுகளை மேற்கு வங்க மாநில சங்கம், கொல்கொத்தா தொலைபேசி மாநில சங்கம் உள்ளிட்ட நான்கு மாநில சங்கங்கள் இணைந்து செய்து வருகின்றது. கொல்கொத்தா, அலிபூர் டெலிகாம் ஃபேக்டரி வளாகத்தில் நடைபெற உள்ள இந்த மாநாட்டினை CITU சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் A.K.பத்மநாபன் துவங்கி வைக்க உள்ளார். நவம்பர் 6ஆம் தேதி பொது அரங்கம் துவங்குவதற்கு முன்னர் மாநாட்டு வளாகத்தில் இருந்து ஒரு பேரணியும், டல்ஹவுசி, R.N.முகர்ஜி சாலையிலிருந்து ஒரு பேரணியும் துவங்க உள்ளது. அந்த இரண்டு பேரணிகளும், பொது அரங்கம் நடைபெற உள்ள ராணி ரஷ்மோனி அவென்யுவில் சங்கமிக்கும். இந்த மாநாட்டில் நிர்வாகத்தின் சார்பில் BSNL CMD மற்றும் DIRECTOR (CM) ஆகியோரும் சகோதர சங்க நிர்வாகிகளும், தோழமை சங்க தலைவர்களும், வாழ்த்துரையும், BSNLன் புத்தாக்கம் தொடர்பான கருத்துக்களையும், இன்னபிற கருத்துக்களையும் வழங்க உள்ளனர்.

கம்பீரமாக ஐந்தாவது முறையாக முதன்மை சங்கமாக உருவாகி உள்ள BSNL ஊழியர் சங்கத்தின் கொல்கொத்தா அகில இந்திய மாநாடு, BSNLன் புத்தாக்கம் தொடர்பாகவும், BSNL ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாகவும், பொதுத்துறைகளை பாதுகாப்பது தொடர்பாகவும், மக்கள் ஒற்றுமையை வலுப்படுத்தியது தொடர்பாகவும், தவறான தாராளமய கொள்கைகளுக்கு எதிரான ஒன்று பட்ட போராட்டங்களை நடத்துவது தொடர்பாகவும் விவாதித்து நல்ல பல முடிவுகளை மேற்கொள்ள உள்ளது.

கொல்கொத்தாவில் சங்கமிப்போம். புதிய சரித்திரம் படைப்போம்.

விழிப்புடன் இருப்போம்

SSA- க்களை குறைத்து AREA - அலுவலகங்களாக மாற்றுவது

ஊழியர்களையும், ஊதியச் செலவையும் குறைப்பது,

அதிகாரிகள் உட்பட அனைத்துப் பணியாளர்களையும் ஒப்பந்த முறையில் நியமிப்பது

- உள்ளிட்ட டெலாய்ட்டி கமிட்டியின் நாசகர பரிந்துரைகளை, தொழிற்சங்கங்களின் ஆலோசனையையும் மீறி, BSNL நிர்வாகம் அமுல்படுத்தத் துவங்கியுள்ளது.

முதற்கட்டமாக, முன்னோட்டு திட்டமாக, மகாராஷ்டிரா மாநிலத்தில், 30 SSA-க்களை 16 AREA அலுவலகங்களாக குறைப்பதற்கான உத்தரவை, BSNL நிர்வாகம், 14.10.2014 அன்று பிறப்பித்துள்ளது.

இதனை எதிர்த்து போராட்ட திட்டத்தை முடிவு செய்வதற்கு, மஹாராஷ்டிரா மாநில BSNL அனைத்து சங்கங்களின் கூட்டம் 20.10.2014 அன்று நடைபெற்றது. மஹாராஸ்டிரா மாநிலத்தில் ''டெலாய்டி'' பரிந்துரையின் அடிப்படையில் ஏரியா அலுவலகம் ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது என அனைத்து தொழிற் சங்கங்கள் எடுத்த முடிவை கடிதமாக மஹாராஷ்டிரா CGM மிடம் கொடுத்து விவாதித்தனர். CGM அவர்கள் ஏரியா அலுவலகம் அமைப்பதை அமல்படுத்தப் படாது என உறுதியளித்துள்ளார். இதனை நமது BSNLEU மஹாராஸ்டிரா மாநிலச் செயலரும், FORUM கன்வீனருமான தோழர்.N.K.நளவாடா, நமது மத்திய சங்கத்திற்கு (CHQ) தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டிலும் 17 SSA க்களை 10 AREA அலுவலகங்களாக குறைக்க வேண்டும் என்பது டெலாய்ட்டி கமிட்டியின் நாசகர பரிந்துரை. தமிழ்நாட்டிலும் விழிப்புடன் இருப்போம்.

பணி ஓய்வு

தோழர் K.கணேசன், TM, தூத்துக்குடி

1981-ஆம் வருடம் டெலிகிராஃப்மேனாக பணியில் இணைத்து, 31.8.2014-இல் பணி ஓய்வு பெற்றுள்ளார். தூத்துக்குடி கிளைச் சங்கத்திலும், மாவட்டச் சங்கத்திலும் பொறுப்பேற்று செயல்பட்டுள்ளார். துவக்கம் முதல் K.G.போஸ் அணியின் கொள்கையில் உறுதியுடன் செல்பட்ட தோழர் பணி ஓய்வை ஒட்டி, தூத்துக்குடி மாவட்ட மாநாட்டில் மாநிலச் செயலாளர் தோழர்.S.செல்லப்பா நேரிடையாக பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். மாவட்டச் சங்கத்திற்கு ரூ.1000, மாநிலச் சங்கத்திற்கு ரூ.500, நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் K. செல்வராஜ், TM,
மேட்டுப்பாளையம், கோவை.

1992-ஆம் ஆண்டு ரெகுலர் மஸ்தூராகப் பணியில் சேர்ந்து, 1997-ஆம் ஆண்டு டெலிகாம் மெக்கானிக்காக பதவி உயர்வு பெற்றார். நமது சங்கத்தில் முன்னணி உறுப்பினராக செயல்பட்ட தோழர் மேட்டுப்பாளையம் கிளைச் சங்கத்தில் பொறுப்பேற்று செயல்பட்டுள்ளார். 31.8.2014 அன்று பணி ஓய்வு பெற்ற தோழர், மாவட்டச் சங்கத்திற்கும், மாநிலச் சங்கத்திற்கும் தலா ரூ.500 நன்கொடை அளித்துள்ளார்.

தோழர். R. கோவிந்தசாமி, (SSS(O),
ஈரோடு.

டிசம்பர் 1977-ஆம் வருடம் குறுநேர பணியாளராக இலாகாவில் சேர்ந்து, 1979-ஆம் ஆண்டு நிரந்தரம் பெற்று 31.3.2014 அன்று எழுத்தராக பணி ஓய்வு பெற்றார். கவிதை, கட்டுரைகள் ஈடுபாடு உள்ளவர். நமது சங்க நடத்திய போராட்டங்களிலும், தொழிற் சங்க நடவடிக்கைகளிலும் ஆர்வத்தோடு பங்கேற்றவர். பணி ஓய்வை ஒட்டி, கிளை, மாவட்ட, மாநில, அகில இந்திய சங்கங்களுக்கு தலா ரூ.500 நன்கொடை அளித்துள்ளார்.

தோழர். கே.பழனிச்சாமி, TM கோவை.



1980- ஆம் ஆண்டு கேஷுவல் லேபராக இலாகாவில் சேர்ந்த தோழர் ரெகுலர் மஸ்தூராக நியமனம் பெற்று டெலிகாம் மெக்கானிக்காக பதவி உயர்வு பெற்று 30.6.2014 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். கிளைச் சங்கத்தில் பொறுப்பு வகித்த தோழர் அனைத்து இயக்கங்களிலும் ஆர்வமுடன் கலந்து கொண்டவர். பணி ஓய்வை ஒட்டி, கிளை, மாவட்ட, மாநில, அகில இந்திய சங்கங்களுக்கு தலா ரூ.500 நன்கொடை அளித்துள்ளார்.

தோழர்.M.A. கபீர், RM குறிச்சி, கோவை.

1978-ஆம் ஆண்டு பணியில் ரெகுலர் மஸ்தூராக சேர்ந்த தோழர், 31.7.2014 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். பணி ஓய்வை ஒட்டி, மாவட்ட மாநில சங்கங்களுக்கு தலா ரூ.500 நன்கொடை அளித்துள்ளார்.

தோழியர் D.செல்வம், SSS (O) கோவை.

1973- ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த தோழியர் 31.5.2014 அனறு பணி ஓய்வு பெற்றுள்ளார். சங்கப் பிடிப்புடன் செயல்பட்ட தோழியர் பணி ஓய்வை ஒட்டி, கிளை, மாவட்ட, மாநில, அகில

இந்திய சங்கங்களுக்கு தலா ரூ.500/- நன்கொடை அளித்துள்ளார்.

தோழர்.C.முத்துச்சாமி, கோவை.

29 வருட சேவைக்குப் பின்னர், 31.10.2014 அன்று விருப்ப ஓய்வு பெற்றுள்ளார். தொழிற் சங்கத்தில் ஆர்வமுடன் செயல்பட்ட தோழர். பணி ஓய்வை ஒட்டி, கிளை, மாவட்ட மாநில சங்கங்களுக்கு தலா ரூ.500 நன்கொடை அளித்துள்ளார்.

தோழர். கே.நடராஜன், TTA, பொள்ளாச்சி.



30.6.2014 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். பொள்ளாச்சியில் K.G.போஸ் அணியைக் கட்டுவதில் முக்கியமான பங்கு வகித்தவர். பணி ஓய்வை ஒட்டி, அகில இந்திய சங்கத்துக்கு ரூ.500 நன்கொடை அளித்துள்ளார்.

தோழர் S.N. செல்வராஜ், TM, தஞ்சாவூர்

மன்னையில் 04.08.1979 அன்று இலாக்காவில் பணிக்கு சேர்ந்த தோழர் S.N.செல்வராஜ் பல விருதுகளை பெற்று சாதனைப் படைத்தவர். 30.06.2014 அன்று தஞ்சையில் பணி நிறைவு பெறும்பொழுது BSNLEU சங்கத்தில் மாவட்ட பொருளாளர் என்ற பெருமையையும் தன்னை உயர்த்தி மகிழ்ச்சியுடன் பணி நிறைவு பெறுகிறார். தஞ்சை மாவட்டத்தில் நடத்தப்பட்ட அனைத்து இயக்கங்களிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படுபவர். தோழர் SNS அவர்களையும் அவரது குடும்பத்தாரையும் BSNLEU மாநிலச் சங்கம் மனதார பாராட்டுகிறது.

மாநில சங்கத்திற்கு ரூ500/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர் R.பக்கிரிசாமி, TSO, திருவாரூர்

19.06.1974 மயிலாடுதுறையில் இலாக்காவில் சேர்ந்த தோழர் R.பக்கிரிசாமி அவர்கள் DOT காலத்தில் பல விருதுகளை பெற்று சாதனைப் படைத்தவர். இன்று



30.09.2014 திருவாரூரில் பணி நிறைவு பெறும்பொழுது BSNLEU சங்கத்தில் முன்னோடியாக தன்னை உயர்த்தி மகிழ்ச்சியுடன் பணி நிறைவு பெறுகிறார். தோழர் R.பக்கிரிசாமி அவர்களையும் அவரது குடும்பத்தாரையும் BSNLEU மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது. மாநில சங்கத்திற்கு ரூ250/- நன்கொடை வழங்கியுள்ளார்.

தோழர். பழனிவேல், SSS(O), கோவை.

1974ல் எழுத்தராக பணியில் சேர்ந்தார். தபால்-தந்தி இலாகாவுடன் ஒன்றுபட்டு இருந்தபோது அகில இந்திய அளவில் சிறந்த வாலிபால் விளையாட்டு வீரராக இருந்தார். 40 ஆண்டு கால சேவையில் சங்க அறைகூவல் அனைத்திலும் பங்கேற்றுள்ளார். நன் கொடையாக மாவட்ட, மாநில சங்கத்திற்கு தலா ரூபாய் 500/- நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தோழர். T.G. மனோகரன், TM,



அவர்களின் 30.9.2014 அன்று பணி ஓய்வு பெற்றார். தோழர் அவர்கள் 1980ல் நமது இலாக்காவில் TM ஆக பணி நிரந்தரம் பெற்று வேலூர் மாவட்டம் SDOT பகுதியில் பணியில் அமர்ந்து பிறகு 1994-1995ல் சென்னை CTTCயில் பயிற்சி ஆசிரியராக சிறப்பாக பணிப்புரிந்தள்ளார். 1995ல் NFTEயில் இருந்து விலகி BSNLEU சங்கத்தில் இணைந்து பணி ஓய்வு பெறும்வரை நமது சங்கத்தில் சிறப்பாக பணிபுரிந்துள்ளார். 2012 முதல் 2014 வரை இன்று SDOTவரை கிளை தலைவராக சிறப்பாக பணிபுரிந்துள்ளார்.

தோழியர் K.பங்கஜவள்ளி, SSS(O), கோவை.

25.9.1973 டெலிபோன் ஆப்பரேட்டராக பணியில் சேர்ந்தார். ஒன்றுபட்ட NFTEல் மாவட்ட பொருளாளர் மற்றும் மாநில துணை செயலர் BSNLEU கிளை செயலர் 6 வருடங்கள் ராம் நகர் கிளை உதவி செயலர், கணபதி கிளை அமைப்புச்

செயலர் LCM உறுப்பினர் மற்றும் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் மாவட்ட துணைத் தலைவர் WWCC மாநில குழு உறுப்பினராக சிறப்பாக செயல்பட்டவர். 30.6.2014 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். மாநில சங்கத்திற்கு ரூபாய் 1000/- நன்கொடை கொடுத்துள்ளார். பணி ஓய்வு காலம் சிறக்க மாநில சங்கம் வாழ்த்துகிறது.

தோழர் P.சங்கரநாராயணன் STS,

திருநெல்வேலி மாவட்டம், GM அலுவலகத்தில் பணியாற்றிய தோழர் P.சங்கரநாராயணன் SRTS அவர்கள் தனது 40 ஆண்டு கால Serviceஐ பூர்த்தி செய்து 30.6.14ல் பணி ஓய்வு பெற்றுள்ளார். 20.11.1973ல் Telephone Operator ஆக பணியில் சேர்ந்தார். தொழிற்சங்கத்தில் கிளை அமைப்பு செயலராக பலமுறை பணியாற்றி உள்ளார். அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளார். எல்லா மட்டங்களுக்கும் தலா Rs.1000/- வீதம் Rs.4000 நன்கொடை அளித்து உள்ளார். மேலும் ஒரு 5000/- கிளை மாநாட்டிற்காக நன்கொடை வழங்கி உள்ளார். பணி ஓய்வு காலம் சிறக்க மாநில சங்கம் வாழ்த்துகிறது.

தோழியர் அனுசுயா வெள்ளியங்கிரி

தோழியர் அனுசுயா வெள்ளியங்கிரி அவர்கள் பணியில் 1973 ஆண்டு Oper சேர்ந்து ஜுன் 2014 ஆண்டு STSO ஆக பணி ஓய்வு பெற்றுள்ளார். தொடர்ந்து நமது சங்க உறுப்பினராகவும் சங்கம் நடத்திய அனைத்து போராட்டத்திலும் உறுதியாக கலந்து கொண்டவர். அவர் தம் நன்கொடையாக அனைத்து மட்டத்திற்கும் தலா ரூ.500/- நன்கொடை அளித்துள்ளார். ஓய்வு காலம் சிறக்க மாநில சங்கம் வாழ்த்துகிறது.

●

அனைவரின் பணி ஓய்வுக்காலமும் இனிமையாக அமைய மாநிலச் சங்கத்தின் வாழ்த்துக்கள்!

பணி ஓய்வு பாராட்டு விழா

தோழர் C.பழனிசாமி, நாகர்கோவில்

தோழர் C.பழனிசாமி அவர்கள் 31.07.2014 அன்று பணி ஓய்வு பெற்றதை ஒட்டி, நாகர்கோவில் மாவட்டச் சங்கம் பாராட்டுவிழாவினை ஏற்பாடு செய்திருந்தது. 1976ம் ஆண்டு விருதுநகரில் எழுத்தர் பணியில் சேர்ந்த தோழர். பழனிசாமி அவர்கள் பணி ஓய்வு பெறும் வரை நமது இயக்கத்தை வலுப்படுத்த தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நாகர்கோவிலில் 04.08.2014 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் நமது மத்திய சங்கத்தின் பொதுச் செயலர் தோழர் P.அபிமன்யு, மாநிலச் செயலர் தோழர் S.செல்லப்பா, தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலத் தலைவர் தோழர் P.சம்பத் மற்றும் CITU உள்ளிட்ட சகோதர சங்க தலைவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். பாராட்டுவிழா நடைபெற்ற மண்டபமே நமது தோழர்களால் நிரம்பி வழிந்தது என்பது தோழர். பழனிசாமியின் மீது கொண்ட அன்பு, தோழமை காரணமாக என்பதை பறைசாற்றுவதாக இருந்தது.

நமது மாநிலச் சங்கத்தில் உதவி செயலராக பொறுப்பேற்றுக்கொண்டு தென் தமிழகம் முழுவதும் நமது இயக்கத்தை வலுவாக்கிட தோழர் பழனிசாமி ஆற்றிய பணி மகத்தானது. ஒப்பந்த ஊழியர் சங்கம், BSNL ஊழியர் சங்கம், ஜனநாயக பாதுகாப்பு குழு மற்றும் E-4 சங்கம் என பல அமைப்புகளிலும் மாவட்ட செயலராகவும், மாநிலச்சங்க நிர்வாகியாகவும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு சிறப்பாக செயல்பட்டதை மனதார பாராட்டுகிறோம். தமிழகத்தில் ஒப்பந்த ஊழியர் சங்கத்தை வலுவாக்கிட தோழர். பழனிசாமி ஏராளமான ஆலோசனைகளை வழங்குவதோடு இயக்கத்தை நடத்துவதற்கு செய்த பணிகளும் சிறப்பு மிக்கதாகும். உதாரணமாக தோழர். பழனிசாமி அவர்கள் "பணியில் இருக்கும் போது இறந்துவிட்ட ஒப்பந்த ஊழியரின் குடும்பத்திற்கு குடும்ப பென்ஷன் பெற்றுத் தந்தது" BSNL வரலாற்றில் ஒரு புதிய மைல் கல் ஆகும். தொலைத் தொடர்பு தோழன் பத்திரிக்கையில் ஆசிரியர் குழுவில் செயலாற்றிய பொழுது பத்திரிக்கையின் தரம் உயர்வதற்கு தோழர் பழனிசாமி எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்.

நமது பொதுச் செயலர் தோழர் P.அபிமன்யு அவர்கள் ஏதாவது உத்தரவு வேண்டுமென்றால் உடனடியாக பழனிசாமியைத்தான் தொடர்பு கொள்வார். எல்லா விதமான உத்தரவுகளையும் பாதுகாத்து வைத்து இருப்பதால் தோழர் பழனிசாமி

உடனடியாக நமது பொதுச் செயலருக்கு கொடுத்து விடுவார். மத்திய சங்கத்திற்கு back end ஆக இருந்து செயல்பட்டவர் பழனிசாமி என நமது பொதுச் செயலரே பாராட்டினார். போராட்டங்களைத் தலைமை ஏற்று நடத்தியதால் 35 நாட்கள் Dies-non, A Rule-16 குற்றப்பத்திரிக்கை மற்றும் FR17-ஹ என இவர் ஏற்ற விழுப்புண்கள் இயக்கத்திற்கு உரமாகியுள்ளது. BSNL ஊழியர் மாநிலச் சங்கத்திற்கு தோழர். பழனிசாமி ஆற்றிய பணிகள் மகத்தானது என்று கூறிய மாநிலச் செயலர் பல்வேறு அம்சங்களை நினைவு கூர்ந்தார். "இந்த இயக்கத்தில் முழுமூச்சாக நான் வேலை செய்ய தோழர் பழனிசாமி உதவி செய்ததால் தான் என்னால் திறம்பட பணியாற்ற முடிந்திருக்கிறது" என்று தோழியர் இந்திரா அவர்கள் பாராட்டியது பழனிசாமியின் மணிமகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல் ஆகும்.

பழகுவதற்கு இனிமையான பழனிசாமி ஆற்றிய இயக்கப்பணிகளைப் பாராட்டியதோடு அவருக்கு உற்ற துணையாக நின்ற தோழியர் இந்திரா அவர்களையும் பொதுச் செயலரும், மாநிலச் செயலரும் மனதார பாராட்டினர். தமிழ் மாநிலச் சங்கத்தின் நெஞ்சு நிறை பாராட்டுக்களை தோழர் பழனிசாமிக்கு உரித்தாக்குகிறோம்.

தோழர் P.ராமர்
பணி ஓய்வு பாராட்டு விழா

1974ம் ஆண்டு ஒரிஸா மாநிலத்தில் STR பகுதியில் கேஷுவல் மஸ்தூராக பணியில் சேர்ந்த தோழர் ராமர், 30.06.2014 அன்று தூத்துக்குடியில் பணி ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு தூத்துக்குடி மாவட்டச் சங்கம் 19.09.2014 அன்று நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் பணி ஓய்வு பாராட்டு விழாவினை சிறப்பாக நடத்தியது. நமது மாநிலச் செயலர் தோழர் S.செல்லப்பா, உதவிச் செயலர் தோழர் C.பழனிசாமி, AIBDPA மாநில தலைவர் தோழர் S.மோகன்தாஸ் மற்றும் சகோதர சங்கத் தலைவர்கள் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தூத்துக்குடியில் 1986ம் ஆண்டு குப்தா அணியை எதிர்த்து CTX கிளையில் செயலராக போட்டியிட்டு வென்ற பெருமை தோழர் ராமருக்கு உண்டு. 2010ம் ஆண்டு முதல் தூத்துக்குடி மாவட்டச் செயலராக திறம்பட சிறப்பாக செயலாற்றியவர் தோழர். ராமர். தூத்துக்குடி மாவட்டம் தொடர்ந்து சங்க அங்கீகார தேர்தலில் முதலிடம் பெறுவதற்கு தோழர். ராமர் ஆற்றிய பணி மகத்தானது. தோழர். ராமர் பல போராட்டங்களை தலைமை ஏற்று நடத்தியிருக்கிறார்.

ஆரம்ப நாட்களில் தூத்துக்குடியில் Line Staff தோழர்களை சங்க வித்தியாசமில்லாமல் அணுகி, நமது சங்கத்திற்கு திரட்டிய பெருமை இவருக்கு உண்டு. 97 ஒப்பந்த ஊழியர்களை பணி நீக்கம் செய்ய நிர்வாகம் முடிவெடுத்தபோது அதை போராடி தடுத்து நிறுத்தியுள்ளார்.

தோழர் ராமர் அவர்களின் பணி ஓய்வு காலம் சிறக்க தமிழ் மாநிலச் சங்கம் மனதார வாழ்த்துகிறது.

தோழர் C.ஞானசேகரன்
பணி ஓய்வு பாராட்டு விழா

1975ம் ஆண்டு திருப்பத்தூரில் தொலைபேசி இயக்குநராக பணியில் சேர்ந்த தோழர் C.ஞானசேகரன் 30.09.2014 அன்று பணி ஓய்வு பெற்றார். 1998ம் ஆண்டு E3 (N) சங்கத்தின் மாவட்டச் செயலராக தேர்ந்தெடுக்கப்பட்ட திலிருந்து பணி ஓய்வு பெறும் வரை BSNLEU மாவட்டச் செயலராக தொடர்ந்த பெருமை அவருக்கு உண்டு. தபால் தந்தி இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர் தோழர் C.S.P அவர்களாலும், வேலூர் மாவட்டத்தின் முன்னணி தலைவர்களின் ஒருவரான தோழர் K.A.பரமசிவம் அவர்களாலும் கண்டெடுக்கப்பட்டவர் தோழர் ஞானசேகரன் ஆவார்.

NFTE சங்கம் வேலூரில் வலுவாக இருந்தாலும் நமது இயக்கத்தை வலுவாக்கிட தொடர்ந்து தோழர் ஞானசேகரன் செய்த முயற்சி மகத்தானது. உதாரணமாக 100 உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாக இருந்ததை 300க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட சங்கமாக மாற்றியதில் ஞானசேகரனின் பங்கு சிறப்பானது. 1984, 86 ஆகிய ஆண்டுகளில் டெலிபோன் பவன் கிளையில் குப்தா அணியோடு போட்டியிட்டு கிளைச் செயலராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் தான் தோழர் ஞானசேகரன்.

வேலூர் நகரத்தில் வலுவாக செயல்படக்கூடிய அமைப்பு "அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு" ஆகும். அதனுடைய கன்வீனராக தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி வருகிறார்.

சமீபத்தில் 140 ஒப்பந்த ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்ட போது அவர்களை மீண்டும் பணிக்கு எடுக்கச் சொல்லி 01.08.2014 முதல் 7 நாட்கள் தொடர் உண்ணாவிரதத்தை GM அலுவலக வளாகத்தில் தலைமையேற்று நடத்தியவர் தோழர் ஞானசேகரன். ஒப்பந்த ஊழியருக்காக தொடர்ந்து போராடியவர் தோழர் ஞானசேகரன் என்பது அவரது பணி ஓய்வு பாராட்டு விழாவில் பெருவாரியாக ஒப்பந்த ஊழியர்கள் கலந்து கொண்டதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

தோழர் ஞானசேகரன் அவர்களுக்கு 03.10.2014 அன்று பணி ஓய்வு பாராட்டு விழாவை வேலூர் மாவட்டச் சங்கம் சிறப்பாக நடத்தியது. 400க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட பணி ஓய்வு பாராட்டு விழாவில் சிறப்பு அம்சமாக CPM கட்சியின் மாநிலச் செயலர் தோழர் G.ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியது நெகிழச் செய்வதாகவும், வேலூர் மாவட்டச் சங்கத்திற்கு உத்வேகம் ஊட்டுவதாகவும் இருந்தது. மார்க்சிஸ்ட் இதழின் ஆசிரியர் தோழர் N.குணசேகரன், மாநிலச் செயலர் தோழர் S.செல்லப்பா, பொருளாளர் தோழர் K.சீனிவாசன், CGM(O) அலுவலக மாவட்டச் செயலர் தோழர் K.V.சிவக்குமரன், இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் தலைவர்கள் தோழர் நாராயணன், தோழர் ராமன் மற்றும் அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

தோழர் ஞானசேகரன் அவர்களின் பணி ஓய்வு காலம் சிறக்க தமிழ் மாநிலச் சங்கம் மனதார வாழ்த்துகிறது.

பி.எஸ்.என்.எல் மூடலா?

இந்தியாவில் மிகப்பெரும் பொதுத்துறை நிறுவனமான பி.எஸ்.என்.எல் உட்பட பத்து முக்கிய பொதுத்துறை நிறுவனங்களை 'நட்டத்தில் இயங்குபவை' என்று காரணம் காட்டி முற்றாக மூடுவதற்கு நரேந்திர மோடி அரசு திட்டமிட்டு வருகிறது. மத்தியில் பாஜக அரசு பதவியேற்று மூன்று மாதங்களே ஆகியுள்ள நிலையில், பன்னாட்டு, உள்நாட்டு பெரும் முதலாளிகளின் கொள்ளை லாபத்திற்கு வழி செய்யும் விதத்தில் அனைத்தும் தனியார்மயம் என்ற நாசகர பாதையில் வெகு வேகமாக பயணித்து வருகிறது. இந்நிலையில், நட்டத்தில் இயங்குபவை என்று காரணம் காட்டி 10 பெரிய பொதுத்துறை நிறுவனங்களை மூடி விடுவது என்று திட்டமிட்டுள்ளது பா.ஜ.க அரசு.

பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (பி.எஸ்.என்.எல்), மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் (எம்.டி.என்.எல்), ஏர் இந்தியா, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், இந்துஸ்தான் பெர்டிலைசர்ஸ் கார்ப்பரேசன், எம்எம்டி மிஷின் டூல் லிமிடெட் உள்ளிட்ட நிறுவனங்கள் இதில் அடங்கும். இது தொடர்பாக மத்திய அமைச்சரவைக்கு அறிக்கை அளிக்கும் பொருட்டு ஆலோசனை நடத்துவதற்காக செவ்வாயன்று தில்லியில் மத்திய அமைச்சரவை செயலாளர் அஜித் குமார் சேத் தலைமையில் உயரதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் என்ன பேசப்பட்டது என்பது குறித்து தகவல் வெளியிடப்படவில்லை எனினும், மேற்கண்ட நிறுவனங்களை உடனடியாக மூடுவதற்கான ஆலோசனைகளை வரையறை செய்து அமைச்சரவைக்கு அளிப்பது என தீர்மானிக்கப்பட்டதாக மத்திய அமைச்சரவைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தொலைத் தொடர்பு சேவைகள் BSNL மற்றும் MTNL பொதுத்துறை நிறுவனங்கள் மூலமாக மலிவான கட்டணத்தில் கிடைத்து வந்தன. இந்நிறுவனங்கள் மூடப்பட்டால் சந்தேகம் இன்றி இவற்றின் கட்டணங்கள் கடுமையாக உயர்த்தப்படும். ரயில்வே துறைக்கு அடுத்து பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களே நாடு முழுவதும் அதிகமான நிலச் சொத்துக்களை வைத்துள்ளன. எந்த தனியார் கம்பெனியிடமும் இந்நிறுவனங்களிடம் உள்ளது போன்று கேபிள்கள், கோபுரங்கள், கட்டிடங்கள் போன்ற சொத்துக்கள் மற்றும் கட்டுமானக் கன்றுகள் இல்லை.

தனியார் கம்பெனிகள் இந்த கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திக் கொள்ள அரசை நிர்ப்பந்தித்து வருகின்றன. தற்போதைய நடவடிக்கை கார்ப்பரேட்டுகளை திருப்திப்படுத்த எடுக்கப் படுவதாகும். பி.எஸ்.என்.எல், 9 ஆண்டுகள் வரை ரூ. 45 ஆயிரம் கோடி வரை லாபம் சம்பாதித்து கொடுத்தது. மொபைல் கருவிகளுக்காக டெண்டர் விட்டபோதுதான் நட்டம் தொடங்கியது. சேவைகளை மேம்படுத்தவும் நிதியை பலப்படுத்தவும் பல ஆலோசனைகளை ஊழியர் சம்மேளனம் வழங்கியது. ஆனால் அவை அரசினாலும் பிஎஸ்என்எல் நிர்வாகத்தினாலும் கண்டுகொள்ளப் படவில்லை கடந்த 2 ஆண்டுகளாக நட்டம் குறைந்து வந்தது. மேலும் மேம்படுவதற்காக நல்ல வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

இந்த சூழ்நிலையில் பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களை மூடி விட திட்டமிடுவது, மொத்த சேவைகளையும் கார்ப்பரோட்டுகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் தொலைத் தொடர்பு சேவைகளை அடகு வைப்பதாகும். அவற்றை பாதுகாப்பதற்காக இறுதி வரை போராடுவோம் எனவே பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களை மூடும் திட்டத்தை கை விட்டு இந்நிறுவனங்களைப் புத்தாக்கம் செய்யுமாறு அரசுக்கு கோரிக்கை விடுக்கிறோம். இந்நிறுவனத்தை மூட அரசு முடிவு செய்தால் மிகப்பெரும் போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கின்றோம். ஒன்றுபட்ட போராட்டம் ஒன்றே நமது துயரோட்டும் !!!

BSNL ஊழியர் சங்கம்
7-வது தமிழ்
மாநில மாநாடு

BSNLEU

BSNLEU

7-வது தமிழ்
மாநில மாநாடு
BSNLEU

7வது தமிழ் மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள்